1995

## தமிழ் வளர்ச்சித் துறை

அனுப்புநர்

**திரு.ம.கோவிந்தராவ்,**
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

பெறுநர்

முதல்வர்,
கலை / அறிவியல் / பொறியியல் / தொழில்நுட்பம் / கல்வியியல் / செவிலியர் / தொழிற்பயிற்சிக் கல்லூரிகள்,
தஞ்சாவூர் மாவட்டம்.

திருவள்ளுவராண்டு 2051 / சார்வரி / ஆடி - 26
ந.க.எண்.58/2020/தவ, நாள் : 10.08.2020.

ஐயா,

**பொருள்:** தமிழ் வளர்ச்சி - திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு – 1330 குறட்பாக்களையும் முற்றோதும் மாணவர்களுக்கு ரூ.10,000/- பரிசு – தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறுதல் - கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் - தொடர்பாக.

**பார்வை:** 29.11.2019 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்(தவ1.2)துறை அரசாணை (நிலை) எண் 161.

= = = = =

மாணவர்கள் இளம் வயதிலேயே திருக்குறட்பாக்களை மனப்பாடம் செய்தால் அவை பசுமரத்தாணிபோல் பதிந்து, நெஞ்சில் நிலைத்து அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டும். தாம் பெறுகின்ற கல்வியறிவோடு, நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாக வழிவகுக்கும். எனவே, திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது, மாணவர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்பதாக அமையும். அதனைக் கருத்தில் கொண்டு, 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்கள் திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுத்தொகை ரூ.10,000/-, பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப்பெறுகின்றனர்.

அவ்வகையில், நகர்ப்புறம், கிராமப்புறம் ஆகியவற்றில் உள்ள அரசு / அரசு உதவிபெறும்/ தனியார் உள்ளிட்ட அனைத்து கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு திருக்குறள் முற்றோதல் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவது அவசியமாகிறது. எனவே, தங்கள் கல்லூரியில் திருக்குறள் முற்றோதும் மாணவர்கள் இருப்பின் அவர்கள் தமிழ் வளர்ச்சி துறையின் **www.tamilvalarchithurai.com** என்ற வலைதள முகவரியில் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து நிறைவுசெய்யப்பெற்ற விண்ணப்பங்களை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மூன்றாம் தளத்தில், அறை எண் 337இல்

அமைந்துள்ள தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ [ தொலைபேசி எண். 04362-271530 ] அளிக்கபெறலாம்.

**திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறுவதற்கான விதிமுறைகள்**

- 1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- இயல் எண், பெயர், அதிகாரம் எண், பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தால் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- திருக்குறளின் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப்பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- தஞ்சாவூர் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள கலை / அறிவியல் / பொறியியல் / தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி / கல்வியியல் / செவிலியர் / அரசு / அரசு உதவி பெறும், சுயநிதிக் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.
- தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறும் இப் பரிசினை ஏற்கனவே பெற்றவராக இருத்தல் கூடாது.
- திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

ஒம்/- மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

மாவட்ட ஆட்சியருக்காக